நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சங்கரன்கோவில்

முன்னிலை : செல்வி. G.பவித்ரா, L.L.M.,

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, சங்கரன்கோவில்.

நீதித்துறை நடுவர், சங்கரன்கோவில் (மு.கூ.பொ)

Cr.M.P.301/2026

சின்னக்கோவிலான்குளம் காவல் நிலைய குற்ற எண். 21/2026

**பிரிவுகள் 296(b), 115(2), 351(3) BNS, 4 of TNPHW Act**

உத்தரவு நாள்: 05.03.2026

**CNR No. TNTS09-000651-2026**

ரவி,
த/பெ. தர்மர்

..... மனுதாரர்/ எதிரி

/எதிர்/

காவல் உதவி ஆய்வாளர்,
சின்னக்கோவிலான்குளம் காவல் நிலையம்

..... எதிர்மனுதாரர்/வாதி

மனுநாள்: 02.03.2026, மனு 480 of BNSS

இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அரசு தரப்பு பதில் பெறப்பட்டது.

2. மனுதாரர்/எதிரி தரப்பில், சின்னக்கோவிலான்குளம் காவல் நிலைய குற்ற எண்.21/2026, பிரிவுகள் 296(b), 115(2), 351(3) BNS, 4 of TNPHW Act-ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, ரிமாண்ட் ஆகி நீதிமன்ற உத்தரவுப்படி பிணையில் சென்றுள்ளார் என்றும், மனுதாரர்/எதிரி சமூக நீதிமன்ற உத்தரவுப்படி 05.02.2026 முதல் நாளது வரை எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் தினமும் காலை 10.00 மணிக்கு நிபந்தனை கையொப்பம் செய்து வருகிறார் என்றும், மனுதாரர்/எதிரி தினமும் நாளது தேதி வரை எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் நிபந்தனை கையெழுத்து செய்து வருவதால் அவர் செய்து வரும் வெளியூரில் தினக் கூலி வேலைக்கு செல்ல முடியாமல மிகுந்த சிரமத்தில் இருந்து வருவதுடன் குடும்பத்தைக் கவனிக்க முடியாமல் நொடிந்த நிலையில் வாழ்ந்து வருகிறார் என்றும், எனவே, மனுதாரர் சமூகமன்ற உத்தரவுப்படி எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் நிபந்தனை கையொப்பம் செய்து வருவதை முழு தளர்வு செய்து உத்தர வேண்டுமென்றும் எடுத்துரைக்கப்பட்டது.

3. அரசு/எதிர்மனுதாரர் தரப்பில், இந்த வழக்கில் சின்னக்கோவிலான்குளம் காவல் நிலைய குற்ற எண்.21/2026, பிரிவுகள் 296(b), 115(2), 351(3) BNS, 4 of TNPHW Act-ன் எதிரி மேற்படி வழக்கில் பிணையில் வெளிவந்த நாள் 07.02.2026 முதல் 04.03.2026 வரை தினமும் காலை 10.00 மணிக்கு ஆஜராகி மொத்தம் 25 நாட்கள் கையொப்பம் செய்துள்ளார் என்றும், இதில் 19.02.2026-ம் தேதி மட்டும் எதிரி கையொப்பம் செய்யவில்லை என்றும், எனவே, எதிரி மீதுள்ள நீதிமன்ற நிபந்தனையை மாற்றியமைக்க கடுமையாக ஆட்சேபனை தெரிவிப்பதாக எடுத்துரைக்கப்பட்டது.

4. முடிவில் மனுதாரர்/எதிரியானவர் 07.02.2026 முதல் 04.03.2026 வரை மொத்தம் 25 நாட்கள் எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் காலை 10.00 மணிக்கு தவறாமல் ஆஜராகி தொடர்ந்து கையெழுத்து செய்து வருவதாகவும், இதில் 19.02.2026-ம் தேதி மட்டும் எதிரி

கையொப்பம் செய்யவில்லை என்றும் எதிர்மனுதாரர் தரப்பில் தெரிவித்துள்ளதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது. இந்நிலையில், மேற்படி மனுதாரர்/எதிரி தினமும் எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் கையெழுத்திட்டு வருவதால் அவர் செய்து வரும் கூலி வேலை பாதிப்படைகிறது என்பதாலும், அவரால் மேற்படி நிபந்தனையின்படி எதிர்மனுதாரர் காவல் நிலையத்திற்கு வந்து கையெழுத்து செய்தால் அவரது வாழ்வாதாரம் பாதிக்கக்கூடும் என்பதைக் கருத்தில்கொண்டும், அவரின் குடும்ப சூழ்நிலையையும் கருத்தில் கொண்டும், மனுதாரர்/எதிரி இந்த வழக்கின் விசாரணைக்கு தவறாது ஒத்துழைப்பு தருவார் என தெரிவித்துள்ளதைக் கருத்தில் கொண்டும், மனுதாரர் / எதிரியின் நிபந்தனையை மாற்றி அமைக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்து, அதன்படி மனுதாரர்/எதிரிக்கு விதித்துள்ள நிபந்தனையை மாற்றியமைத்து ஒவ்வொரு சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்கள் ஒரு மாத காலத்திற்கு கையெழுத்திட வேண்டுமென்று இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

PAVITHRA G

Digitally signed by PAVITHRA G
Date: 2026.03.05 17:41:37 +0530

நீதித்துறை நடுவர், (மு.கூ.பொ),
சங்கரன்கோவில்.